விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 16 வைகாசி 13 [illegible] 84 இதழ் 101

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 26 5 84


## "அரசியல்தீர்வு இல்லையானால் விடுதலைப்போராட்டமே ஒரேவழி!"

### சென்னையில் 'அமிர்' கருத்து

சென்னை, மே 25

"இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண வேண்டுமென்ற நோக்கத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணி சர்வகட்சி மகாநாட்டில் தொடர்ந்து கலந்துகொள்ளும்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், சென்னையில் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக திரு. அமிர்தலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:

"இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண இலங்கை அரசால் முடியாவிட்டால், விடுதலைக்காகப் போராடுவதைத்தவிர தமிழ்மக்களுக்கு வேறு வழியில்லை.

"அமெரிக்கத் தம்பதிகளின் கடத்தல் தொடர்பாக இலங்கை அரசு இந்தியாவைச் சந்தேகிப்பதற்கு எந்தவித ஆதாரமுமில்லை. இந்தியாவின் வேண்டுகோளுக்கிணங்கவே அமெரிக்கத் தம்பதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள். இல்லாவிடில் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டிருக்கும்.

(8ம் பக்கம் பார்க்க)

# "இந்தியா படை எடுத்தாலும் நாம் சரணடையமாட்டோம்!

## சவாலையும் ஏற்கத் தயார்!!"

### பாராளுமன்றத்தில் பிரதமர் சூளுரை

(இ. கந்தசாமி)

"இந்தியா எமது நாட்டின்மீது வேண்டுமானால் படை எடுத்துப் பார்க்கட்டும். நாம் சிறிய நாடாக இருந்தாலும் சரணடையமாட்டோம். இதனைப் பொறுப்புடன்தான் கூறுகிறேன். இந்தியாவின் நடவடிக்கைக்கு எம்மால் முடிந்தளவு பொறுத்துவிட்டோம்! பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. இனியும் பொறுக்கமாட்டோம்'

இவ்வாறு பிரதமர் திரு ஆர். பிரேமதாசா நேற்றுக் காலை பாராளுமன்றத்தில் மிகுந்த ஆவேசத்துடன் கூறினார்.

திருகோணமலை எண்ணெய்க் குத ஒப்பந்த விவாதத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு அனுரா பண்டாரநாயக்கா, "நேற்று அதிகாலை பிரதமர் சற்றுக்கோபமாக இந்திய படையெடுப்புக்குறித்து கூறிய கருத்துக்கள் பாரதூரமானவை. பிரதமரின் இந்தச் சவாலை இந்தியா பாரதூரமாக எடுத்துக்கொண்டால், எமது நிலை என்னவாகும் என்று எண்ணியே பார்க்க முடியாது" என்று கூறியிருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு சொன்னார்.

பிரதமர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"எனது இந்தக் கூற்றை ஒரு சவாலாகவும், பாரதூரமாகவும் எடுக்கும்படி இந்திய அரசிடம் போய் சொல்லுங்கள். நீங்கள் கோழைகள், சுயகௌரவமற்றவர்கள், நாட்டுப்பற்றற்றவர்கள்; பயந்தாங்கொள்ளிகள் அவர்களது

[8ம் பக்கம் பார்க்க]

அமெரிக்கத் தம்பதிகள் கடத்தல் விவகாரம்:

## இந்திராவின் முயற்சிக்கு அமெரிக்க அதிபர் நன்றி!

(புதுடில்லி)

இலங்கையில் கடத்தப்பட்ட அமெரிக்கத்தம்பதிகளை விடுவிக்க இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி எடுத்த முயற்சிகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி திரு. ரொனால்ட் ரீகன் நன்றி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் ரீகன், இந்தியப் பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். இந்தியப் பிரதமரின் முயற்

(8-ம் பக்கம் பார்க்க)

### இரு சடலங்களும் அடக்கம்

(யாழ்ப்பாணம்)

அடையாளம் காணப்படாமல் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த

(8 ம் பக்கம் பார்க்க.

## 'இலங்கையை கைப்பற்ற விரும்பினால் மறைமுகமாக செயற்படவேண்டாம்"

### இந்திராவுக்கு பிரதமர் விடுத்த வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையை ஆக்கிரமிப்புச் செய்ய இந்தியா விரும்பினால் மறைமுகமாகச் செயற்பட வேண்டாமென்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை நான் கேட்டுக் கொள்கிறேன்'

இவ்வாறு பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா நேற்று முன்தினம் இரவு பாராளுமன்றத்தில் அவசரகால நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தை முடித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'இந்தியாவில் இலங்கை அரசுக்கு எதிரான பிரச்சாரம் செய்துவரும் பயங்கரவாதிகளை இந்திய அரசு இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்க வேண்டும்.

'வடபகுதியில் ஆயுதப் படைகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்ற இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. நரசிம்மராவ் கூறியது இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்த கருத்தை நான் ஆமோதிக்கிறேன்

'நரசிம்மராவ்வுக்கு அவ்விதம் கூற எந்த உரிமையும் இல்லை அவன் தம்பதிகளை

(8ம் பக்கம் பார்க்க)

## கிராமசேவை அலுவலர் சுட்டுக் கொலை!

(வண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்து கிராமசேவை அலுவலகர் ஒருவர் நேற்று சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

மாதகல் கிராமசேவை அலுவலர் திரு. வி. பிரான்சிஸ் என்பவரே கொலைசெய்யப்பட்டவராவார்.

நேற்று நண்பகல் தனது சம்பளத்தை எடுத்துவிட்டு

[8ம் பக்கம் பார்க்க]

## பிரதேச அபிவிருத்தி அமைச்சு ஊழியர் ஒருவர் சுட்டுக் கொலை!

(யாழ்ப்பாணம்)

பிரதேச அபிவிருத்தி அமைச்சு யாழ் மாவட்ட செயலக ஊழியர் பொன் ஜெயசிங்கம் வேல்டர் 20 என்பவர் நேற்று முன்தினமிரவு துப்பாக்கிச்சூட்டுக்கு பலியானார்.

மாதகலைச் சேர்ந்த இவர் சிறுவயது முதல், யாழ்ப்பாணத்திலேயே வளர்ந்து வந்ததாக கூறப்படுகிறது.

இவர் தேசிய அபிவிருத்தி வீடமைப்பு அதிகார சபை கட்டடத்தில் இயங்கும் பிரதேச அபிவிருத்தி அமைச்சு யாழ். மாவட்ட செயலகத்தில் 'பியோன்'ஆகச் சேர்ந்து கடமையாற்றிவந்தார்.

நேற்றுமுன்தினமிரவு மூன்று வெடிச்சத்தம் கேட்டதாகவும், அயலவர்கள் பகுதிநூல் வழி

8-ம் பக்கம் பார்க்க)

## சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் மீது துப்பாக்கிச்சூடு!

### கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய பொலிஸ் இரகசியப்பிரிவைச்சேர்ந்த உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் அவரது வீட்டிலிருந்து இனந்தெரியாத 5 இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டு, துப்பாக்கியால் சுடப்பட்டார்

கடத்திச் செல்லப்பட்ட சப் இன்ஸ்பெக்டர் பலத்த தேடுதலின் பின்னர் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மருத்துவப்புக்காக நேற்று பகல் 2-30 மணியளவில் விசேட விமானத்தில் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

ஆனைக்கோட்டை உயரப் புலத்தைச் சேர்ந்த எஸ். அந்தோனிப்பிள்ளை என்பவரே கடத்திச் செல்லப்பட்டு துப்பாக்கியால் சுடப்பட்டவராவார். 48 வயதுடைய இவர் ஒரு பிரமச்சாரி.

துப்பாக்கியுடன் 5 இளைஞர்கள்

நேற்று முன்தினம் இரவு 8-30 மணியளவில் இவரது வீட்டுக்கு சைக்கிளில் இளை

(8ம் பக்கம் பார்க்க)

## வங்கிப் பரீட்சையில் ஓர் சலுகை

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணத்தில் நாளை நடைபெறும் வங்கிப் பரீட்சைக்கு தேசிய அடையாள அட்டை, அல்லது அதற்கு இணையான அடையாள அட்டை அல்லது

(8-ம் பக்கம் பார்க்க

## "வடக்கு, கிழக்கில் இஸ்ரேலிய இரகசியப் பிரிவுகள்!"

### அமிர் - குமார் கூட்டறிக்கையில் கண்டனம்

(சென்னை)

"கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் இஸ்ரேலின் பிரிவொன்றை அமைக்க இலங்கை அரசு முயற்சி மேற்கொண்டு வருவது இராணுவ ரீதியில் தமிழ்மக்களை அடக்குமுறை

(8 ம் பக்கம் பார்க்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

